**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.**

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. ரத்தினம் | அசல் வழக்கு எண். | 103/2015 |
| த/பெ. | - | குப்புசாமி | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

18.09.2025.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது அப்பா பெயர் பாலகிருஷ்ணன். எனது தகப்பனாருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பெண் மற்றும் 3 ஆண். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஒரு அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பா கிரையத்திற்கு வாங்கிய சொத்து. என் அப்பா கிரையம் வாங்கிய பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியாது. என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் நீளம் 120 அடி, அகலம் 42 1/2 அடி இருக்கும். எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் பெயர்கள் என்னவென்றால் பாலகிருஷ்ணன், பொன்னுசாமி மற்றும் ராமமூர்த்தி. என் அப்பா எவ்வளவு விஸ்தீரண பூமியை எழுதி வைத்தார் என்றால் நீளம் 120 அடி, அகலம் 42 1/2 அடி பூமியை எழுதி வைத்தார். என் அப்பா எனக்கு எந்த வருடம் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் பத்திரத்தை பார்த்தால் தான் எனக்கு தெரியும். நான் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதியிடம் 12 அடி பூமி உள்ளதால் அதற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் சுமாராக தெரியும். வழக்கின் விவரங்களை என் வழக்கறிஞரிடம் யார் தெரிவித்தார் என்றால் நான் தான் தெரிவித்தேன். வா.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விவரத்தில் சர்வே எண்.327/9 க்கு 0.14 சென்ட், புதிய சர்வே எண்.189/20 க்கு 300 சதுர மீட்டர் அடங்கிய சரவணன், கலியன் இவர்கள் மனைக்கு கிழக்கு, மாரியம்மன் கோவில் வீதிக்கு தெற்கு, ராமசந்திரன், கோபி இவர்கள்

புஞ்சைக்கு வடக்கு, என் தகப்பனார் பாலகிருஷ்ணன் மனை, வீட்டிற்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதற்கு மத்தியில் கிழக்கு மேற்கு 16 அடி தெற்கு வடக்கு 100 அடிகள் ஆக 1600 சதுர மீட்டர் மனை அதில் கிழக்கு மேற்கு 16 அடி தெற்கு வடக்கு 32 அடி நீளமுள்ள கீலகமான கல் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தகப்பனார் நீளம் 120 அடி, அகலம் 42 1/2 அடி கொண்ட பூமியை எனக்கு எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீலகமான கல் வீட்டை தாண்டி எனக்கு பூமி இல்லை என்றால் சரியல்ல. என் வீட்டிற்கும் எனது தகப்பனார் வீட்டிற்கும் இடையில் 9 அடி அகலம் உள்ள வண்டி பாதை உள்ளது என்றால் சரிதான், அதில் தான் சரவணன் வீடு கட்டியுள்ளார். வா.சா.ஆ 1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கீலகமான கல்வீட்டிற்கு மேற்கு புறத்தில் பிரதிவாதிகளுக்கு பாத்தியமான பூமி உள்ளது என்றால் சரியல்ல. என் வழக்குரையின் 4 வது பத்தியில் வாசுதேவன் என்பவரிடமிருந்து சரவணனுக்கு 3 செண்ட் பூமி பரிவர்தனை ஆகியுள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது வேறு சர் வே எண் ஆகும். 1 ம் பிரதிவாதியின் கணவரான சரவணன் பெயரில் உள்ள சொத்தின் சர்வே எண்.327/8 என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது, சரவணன் சர்வே எண் வேறு என்னுடைய சர்வே எண் வேறு. என் சொத்திற்கு மேற்கில் காலி இடம் இல்லை என்றால் இருந்த இடத்தில் தான் பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்டனர். பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டிற்கு வருவதற்கு மாரியம்மன் கோவில் வீதியிலிருந்து 4 அடி பாதைக்கு இடம் விட்டு தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு சரவணன் சொத்தில் எந்த பாத்தியமும் உரிமையும் இல்லை என்றால் சரியல்ல, என்னுடைய சொத்து வேறு சரவணனுடைய சொத்து வேறு என்றால் சரியல்ல. தவறுதலாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா என் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif
Vanur.